# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2025

## பிரிவு 7 (2013 ம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 12)

### விவிலிய வினாவிடைப் போட்டி (சரியான விடையைத் தெரிவு செய்தல், சரியான விடைகளை எழுதுதல்)

1. கடவுள் மனிதனை எத்தனையாம் நாள் படைத்தார்? ஆறாம் நாள்
2. கடவுள் மனிதனை யார் சாயலில் படைத்தார்? தம் சாயலில்
3. ஆதிப்பெற்றோரின் பெயர் என்ன? ஆதாம், ஏவாள்
4. ஆதிப்பெற்றோரை கடவுள் எங்கே குடியேறச்செய்தார்? ஏதேன் தோட்டத்தில்
5. இஸ்ராயேல் நாட்டின் முதல் அரசன் யார்? சவுல்
6. எகிப்தில் பார்வோனுக்கும் அவனது மக்களுக்கும் கடவுள் எத்தனை பெருந்துன்பங்களை அனுப்பினார்? 10
7. பாலைநிலத்தில் நடந்துவந்த இஸ்ரேயல் மக்களுக்கு கடவுள் வழங்கிய உணவு யாது? மன்னா, காடை
8. திருச்சபையின் கட்டளைகள் எத்தனை? 6
9. தூய ஆவியின் கொடைகள் எத்தனை? 7
10. திருச்சபையின் முதல் மறைசாட்சி யார்? புனித ஸ்தேவான்
11. கார்த்திகை மாதம் 1ம் திகதி கொண்டாடப்படும் திருநாள் என்ன? சகல புனிதர்களின் திருநாள்
12. நல்ல சமாரியன் காயப்பட்டவனுக்கு முதல் உதவி செய்யப் பயன்படுத்திய பொருட்கள் எவை? திராட்சை இரசமும், எண்ணெயும்
13. திருஅவை 2025ம் ஆண்டை எந்த ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது? எதிர்நோக்கின் திருப்பயணிகள் ஆண்டு
14. நாசரேத்தூர் தொழுகைக்கூடத்தில் இயேசு யாரால் எழுதப்பட்ட ஏட்டை வாசித்தார்? எசாயா
15. 'இம்மானுவேல்' என்பதன் பொருள் என்ன? கடவுள் நம்மோடு
16. தூய ஆவியின் வருகை, இயேசு உயிர்த்தபின் எத்தனையாம் நாளில் இடம்பெற்றது? 50ம் நாளில்
17. செக்கரியாவின் மனைவியின் பெயர் என்ன? எலிசபேத்
18. பேதுரு இயேசுவை தெரியாது என எத்தனை முறை மறுதலித்தார்? 3
19. கெத்சமெனித் தோட்டத்தில் இயேசு செபிக்க சென்ற போது அவருடன் சென்ற சீடர்கள் யார்? பேதுரு, யாக்கோபு, யோவான்
20. இயேசு தோற்றம் மாறிய போது அவருடன் இருந்த சீடர்கள் யாவர்? பேதுரு, யாக்கோபு, யோவான்
21. இயேசு எத்தனை வயதில் எருசலேம் தேவாலயத்தில் காணாமல் போனார்? 12
22. இயேசு எத்தனை வயதில் நற்செய்திப் பணியை தொடங்கினார்? 30
23. இயேசு எத்தனை வயதில் சிலுவையில் மரணமடைந்தார்? 33
24. இயேசுவுக் மரணதண்டனை தீர்ப்பை வழங்கியவர் யார்? பிலாத்து
25. இயேசு சிலுவை சுமந்துகொண்டு சென்ற போது அவருக்கு சிலுவையை சுமக்க உதவியவர் யார்? சீரேன் ஊர் சீமோன்
26. சிலுவையில் இயேசு உரக்க கத்தி உயிர்விட்டபோது நேரம் என்ன? பிற்பகல் 3 மணி
27. பிலாத்துவிடம் சென்று இயேசுவின் உடலைத் துணிவுடன் கேட்டவர் யார்? அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு
28. இயேசு குருத்துவத்தை ஏற்படுத்தியது எப்போது? இறுதி இராவுணவின் போது (பெரிய வியாழன்)
29. அருட்பணியாளர்களின் திருநாள் எப்போது? பெரிய வியாழன்

30. கொல்கொத்தாவில் இயேசுவிற்கு எதைக் குடிக்கக்கொடுத்தார்கள்? வெள்ளைப்போளம் கலந்த திராட்சை இரசம்
31. இயேசு சிலுவையில் இறுதியாக கூறிய வசனம் என்ன? எல்லாம் நிறைவேறிற்று
32. இயேசு திருமுழுக்கு பெற்ற போது தூய ஆவியார் எவ்வடிவில் தோன்றினார்? புறா
33. பெந்தக்கோஸ்தே திருநாள் அன்று தூய ஆவியார் எவ்வடிவில் தோன்றினார்? அக்கினி போன்ற நா வடிவில்
34. சென்ம பாவத்தை கழுவும் அருளடையாளம் எது? திருமுழுக்கு
35. குணமளிக்கும் அருளடையாளங்கள் எவை? ஒப்புரவு அருட்சாதனம், நோயில் பூசுதல் அருட்சாதனம்
36. எமது திறமைகளை விருத்தி செய்து பொறுப்புக்களில் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க வேண்டும் என்பதற்கு இயேசு கூறிய உவமை எது? தாலந்து உவமை
37. விபசாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்து இயேசுவின் முன்பாக நிறுத்தியவர்கள் யார்? மறைநூல் அறிஞரும், பரிசேயரும்
38. ”மகளே, துணிவோடிரு, உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று என்று இயேசு யாருக்குக் கூறினார்? பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப் போக்கினால் வருந்திய பெண்ணிடம்
39. பிறவிக்குருடனின் கண்களில் சேற்றைப்பூசி எங்கே போய்க் கழுவும்படி இயேசு கூறினார்? சீலோவாம் குளத்தில்.
40. இயேசு “இவர் உண்மையான இஸ்ரயேலர், கபடற்றவர்” என்று யாரைக் குறித்துக் கூறினார்? நத்தனியேலை
41. பயணத்தால் களைப்புற்றிருந்த இயேசு அமர்ந்திருந்த கிணறு எந்த இடத்தில் உள்ளது? சமாரியாவில் உள்ள சிக்கார் என்னும் ஊரில்
42. “நீர் புறப்பட்டுப்போம் உம்மகன் பிழைத்துக்கொள்வான்’’ என்று இயேசு யாருக்குக் கூறினார்? அரச அலுவலரிடம்
43. திருமுழுக்கு யோவானின் உடலை யார் அடக்கம் செய்தனர்? திருமுழுக்கு யோவானின் சீடர்கள்
44. நத்தனியேலை இயேசுவிடம் அழைத்து வந்த சீடர் யார்? பிலிப்பு
45. பிலிப்பு எந்த ஊரைச் சேர்ந்தவர்? பெத்சாய்தா
46. பேதுரு எங்கு எவ்வாறு கொல்லப்பட்டார்? நீரோவின் விளையாட்டு மைதானத்தில் சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டு கொல்லப்பட்டார்
47. நமது திருத்தந்தையின் பெயர் என்ன? திருத்தந்தை பதினான்காம் லியோ
48. பேதுரு என்பதன் பொருள் என்ன? பாறை
49. இயேசுவால் திரு அவையின் தலைமைப் பீடத்திற்கு நியமிக்கப்பட்டவர் யார்? புனித பேதுரு
50. திரு அவையின் சிறப்பு பண்புகள் எவை? ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்

## இடைவெளி நிரப்புக

1. “என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார். .... கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார். ” – **நான்** (யோவான் 14: 26
2. “விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது ... அவர் என்றுமே வாழ்வார் ” - **உண்டால்** (யோவான் 6:51)
3. “ எனது சதை உண்மையான உணவு, எனது இரத்தம் உண்மையான .... . ” -**பானம்** (யோவான் 6: 55)
4. “ ஏழையின் உள்ளத்தோர் பேறு பெற்றோர், ஏனெனில் .... அவர்களுக்குரியது. ” – **விண்ணரசு** (மத்தேயு 5:3)
5. “நீதி நிலை நாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் .... பெறுவர் ”- **நிறைவு** (மத்தேயு 5: 10)

# பேச்சுப்போட்டி

## அமைதியின் செபம்

திரு அவை வரலாற்றின் தலைசிறந்த புனிதர் பிரான்சிஸ் அசிசியார் நமக்குத் தந்த அற்புத செபம் அமைதியின் செபம். அடிக்கடி இச்செபத்தை சொல்லி இறையமைதி இரஞ்சுவோம்.

இறைவா!

அமைதியின் கருவியாய் என்னை உருவாக்கும். எங்கு வெறுப்புள்ளதோ, அங்கு மன்னிப்பையும் எங்கு பகையுள்ளதோ, அங்கு பாசத்தையும் எங்கு அவநம்பிக்கை உள்ளதோ, அங்கு நம்பிக்கையையும் எங்கு வருத்தமுள்ளதோ, அங்கு மகிழ்ச்சியையும் எங்கு இருளுள்ளதோ, அங்கு ஒளியையும் தாரும்.

ஆறுதல் பெறுவதைவிட, பிறருக்கு ஆறுதல் தரவும் பிறர் என்னை புரிந்து கொள்வதை விட, நான் பிறரை புரிந்து கொள்ளவும் பிறர் என்னை அன்பு செய்வதை விட, நான் பிறரை அன்பு செய்யவும் எனக்கு உதவும். ஏனென்றால், கொடுப்பதில் தான் பெறுகிறோம், மன்னிப்பதில் தான் மன்னிப்புப் பெறுகிறோம், இறப்பில் தான் நித்திய வாழ்வடைகிறோம். ஆமென்.

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே - 2
அன்பனே இறைவனே என்னிலே வாருமே
அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே

பகைமை உள்ள இடத்தில் பாசத்தை வளர்க்கவும் - 2
வேதனை நிறைந்த மனதில் மன்னிப்பு வழங்கவும்
கலக்கம் அடையும் வாழ்வில் நம்பிக்கை ஊட்டவும்

தளர்ச்சி ஓங்கும் பொழுது மனதிடம் தழைக்கவும் - 2
இருளே சூழும் வேளை ஒளியை ஏற்றவும்
துயரம் வாட்டும் நேரம் உதயம் காணவும்